**திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு. ஆ. பெருமாள், எம்.ஏ., (பொருளாதாரம்), எம்.ஏ., (சமூகவியல்)**

நி.மு. அ4/36474/2017

நாள்: 22.02.2022

வருவாய் கோட்ட அலுவலகம் 25 FEB 2022 சேரன்மகாதேவி

பொருள்: **கருணை அடிப்படை பணி நியமனம்** - திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகு - அம்பாசமுத்திரம் வட்டம் - வாகைகுளம் கிராமம் - கிராம உதவியாளர் திரு.தளவாய் என்பவர் 24.07.2014 அன்று பணியிலிருக்கும் போது காலமானது - மகன் திரு.த.சக்திமாணிக்கம் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது - தனியர் பணியேற்ற நாளான 11.11.2019 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்: 02.03.2016.
2. அரசாணை (நிலை) எண். 100, பணியளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்: 01.08.2018.
3. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் கடிதம் பணி-4(1)/20849/2019, நாள்: 06.09.2019.
4. திருநெல்வேி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க. அ4/36474/2017 நாள் 09.11.2019.
5. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.அ4/36474/2017, நாள்: 24.12.2020.
6. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, அரசாணை (நிலை) எண்.48 நாள்: 26.02.2021.
7. அரசுக் கடித எண். 9694/பணி 9(2)/2021-3 நாள்: 28.06.2021.
8. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்:ஆ.கு.3/18395/2020, நாள்: 09.08.2021.
9. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்:ஆ.கு.3/18395/2020, நாள்: 03.11.2021.
10. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்:ஆ.கு.3/18395/2020, நாள்: 23.11.2021.

15/8/2022

*********

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், அம்பாசமுத்திரம் வட்டம், வாகைகுளம் கிராமத்தில் கிராம உதவியாளராகப் பணிபுரிந்து 24.07.2014 அன்று காலஞ்சென்ற திரு.தளவாய் என்பவரது மகன் திரு.த.சக்திமாணிக்கம் என்பவருக்கு பார்வை 4-ல் காணும் செயல்முறையின்படி கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு தனியர் சேரன்மகாதேவி வட்டாட்சியர் அலுவலகத்தில் குடிமைப்பொருள் வழங்கல் பிரிவில் தனி வருவாய் ஆய்வாளராகப் 11.11.2019 முற்பகல் முதல்

பணிபுரிந்து வருகிறார். மேலும் தனியர் தற்போது சேரன்மகாதேவி கோட்டாட்சித்தலைவர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக 01.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்..

பார்வை 6-ல் காணும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, அரசாணை (நிலை) எண்.48 நாள்: 26.02.2021-ன்படி 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள கருணை அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனத்தை நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணிநியமன அலுவலர் கோட்டாட்சியராகவும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு பணிநியமன அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) என்ற நிலையில், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலர்கள் அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட அரசுப் பணியாளரின் வரன்முறை செய்யலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணை மற்றும் தெளிவுரைக்கிணங்க நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.த.சக்திமாணிக்கம் என்பவரின் பணி நியமனத்திற்கு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணையின் விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத நிலையில் இருப்பதால் தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியில் சேர்ந்த நாளான 11.11.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

22.2.2022

மாவட்ட வருவாய் அலுவலர்
திருநெல்வேலி

3/3

**பெறுநர்:**

திரு.த.சக்திமாணிக்கம்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
கோட்டாட்சித்தலைவர் அலுவலகம், சேரன்மகாதேவி.

22/2/22

**பணிவு நகல்:**

முதன்மை செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை.

**நகல்:** கோட்டாட்சியர், சேரன்மகாதேவி.
(தனியரின் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு)

**நகல்:** அ4 இருப்பு கோப்பிற்கு,